DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT/SPECIAL COURT UNDER E.C ACT CASES, THANJAVUR

S.C.No. -205/2025

Prosecution PW -1

| | | | |
|---|---|---|---|
| Name | Thiru.Karunagaran | Occupation | |
| Husband/Father Name | | Village | |
| Taluk | | Age | |
| Date | 10.03.2026 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

Accused A2-A4 present. Accused A1 absent. 355 BNSS petition filed and allowed.

முதல் விசாரணை

நான் தற்பொழுது தஞ்சாவூர் தாலுகா காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 11.02.2020ம் தேதி அதே காவல்நிலையத்தில் தலைமைக்காவலராக பணியிலிருந்தபோது, ஆய்வாளர் கழனியப்பன் அவர்களுடன் பகல் 12.00 மணியளவில் நானும், உதவி ஆய்வாளர் பார்த்தசாரதி மற்றும் சிறப்பு உதவி ஆய்வாளர் முத்துவேல் ஆகியோருடன் சூரக்கோட்டை பகுதியில் ரோந்து பணியிலிருந்தபோது, ஆய்வாளருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் பேரில் சூரக்கோட்டை சிவன்கோவில் பின்புறம் சென்று கண்காணித்தபோது, அங்கு பயங்கர ஆயுதங்களுடன் வட்டமாக 5 நபர்கள் உட்கார்ந்து கொண்டு நண்பர் சூரக்கோட்டை ராஜாவைப் பாதுகாக்க பணம் வேண்டும் நோக்கத்தோடு கொள்ளையடித்தால் தான் அவரைப் பாதுகாக்க முடியும் என்ற எண்ணத்தில் திட்டம் தீட்டிக்கொண்டிருந்தவர்களை 12.00 மணியளவில் எங்கள் உதவியுடன் சுற்றி வளைத்து ஆய்வாளர் 5 நபர்களையும் பிடித்து விசாரிக்க அவர்கள் தங்கள் பெயர் கார்த்திக், இசக்கிமுத்து, ராஜபாண்டி, விக்னேஷ், சாமிநாதன் என்று பெயர் விலாசத்துடன் கூறினார்கள். பின்னர் ஆய்வாளர் குற்ற காரணம் கூறி 1 முதல் 5 எதிரிகளை கைது செய்தார். பின்னர் எதிரிகள் மற்றும் தடயச்சொத்துடன் ஆய்வாளர் 13.30 மணிக்கு நிலையம் வந்து நிலைய குற்ற எண்.27/2020 இதச பிரிவு 399 ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். பின்னர் எதிரிகளை விசாரிக்க 1வது எதிரி தாமாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை

ஆய்வாளர் என் முன்பாகவும், முத்துவேல் முன்பாகவும் பதிவு செய்தார். பின்னர் ஆய்வாளர் எதிரிகள் வைத்திருந்த அருவாள்-2, வாள்-1, கம்பி-1, கட்டை-1 ஆகிய ஆயுதங்களை மகசரில் கைப்பற்றினார். அந்த கைப்பற்றுதல் மகசர் அதசாஆ**.1.** அதில் நானும், சிறப்பு உதவி ஆய்வாளர் முத்துவேலும் சாட்சி கையொப்பம் செய்தோம். அருவாள்-2 சா**.**பொ**.1.** வாள்-1 சா**.**பொ**.2.** கம்பி-1 சா**.**பொ**.3.** கட்டை-1 சா**.**பொ**.4.** ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்

<u>குறுக்கு விசாரணை எதிரிகள் தரப்பில்</u>

எதிரிகளை சுமார் 100 மீ தொலைவில் இருந்து கண்காணித்தோம். கோவிலுக்கும் ரோட்டுக்கும் இடையே 100 மீ தொவைவு இருக்கும். 100 மீ தொலைவிலிருந்து எதிரிகள் என்ன பேசிக்கொண்டிருந்தார்கள் என்றால் ஞாபகம் இல்லை. ஆய்வாளருக்கு 12.00 மணிக்கு இரகசியத் தகவல் வந்ததாக கூறியுள்ளேன். அந்த தகவல் எனக்கு நேரடியாக தெரியாது. ஆய்வாளர் சொல்லி தெரியும். ஒப்புதல் வாக்குமூலம் மதியம் 12.00 மணிக்கு தான் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். சம்பவ இடத்திலிருந்து காவல் நிலையம் 5 கிமீ தொலைவில் உள்ளது. எதிரிகளை 12.00 மணிக்கு கைது செய்தோம் என்றால் சரிதான். கைது அறிவிப்பை காவல் நிலையத்தில வைத்து தயாரித்தோம். கைது அறிவிப்பில் சாட்சிகளின் கையொப்பம் இல்லை. கைப்பற்றுதல் மகசரில் எதிரிகளின் கையொப்பம் இல்லை என்றால் சரிதான். 1 வது எதிரியிடமிருந்து தான் அனைத்து ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டது என்றால் சரிதான். ஆய்வாளர் விசாரித்தபோது ஆயுதங்களின் அளவுகளை நான் குறிப்பிட்டு சொன்னதாக ஞாபகம் இல்லை. எதிரிகளை சொன்ன, நாள், நேரம் இடத்தில் கைது செய்யவில்லை என்றாலும், எதிரிகள் எந்தவித ஆயுதங்களையும் வைததிருக்கவில்லை என்றாலும், கொள்ளயடிக்க திட்டமிடவில்லை என்றாலும், ஆய்வாளர் போட்ட பொய்யான வழக்கிற்கு அனுசரனையாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

நான் சொல்ல என் உத்தரவுபடி தட்டச்சிடப்பட்டு
என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும் சாட்சிக்குப் படித்து
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று ஒப்புக்
கொள்ளப்பட்டது.

ஒம்/-...ஜி.சுந்தரராஜன்,
கூடுதல் மாவட்ட (ம) அமர்வு நீதிபதி,
இன்றியமையாப் பண்டங்கள் சட்ட சிறப்பு நீதிமன்றம்,
தஞ்சாவூர்

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT/SPECIAL COURT UNDER E.C ACT CASES, THANJAVUR

S.C.No. -205/2025

Prosecution PW -2

| | | | |
|---|---|---|---|
| Name | திருமதி.தனலெட்சுமி | Occupation | |
| Husband/Father Name | | Village | |
| Taluk | | Age | |
| Date | 10.03.2026 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

Accused A2-A4 present. Accused A1 absent. 355 BNSS petition filed and allowed.

<u>முதல் விசாரணை</u>

நான் சூரக்கோட்டையில் குடியிருந்து ஆர்ஜிலெட்சுமி பவன் என்ற பெயரில் உணவகம் நடத்தி வருகிறேன். சாட்சி ராமலிங்கம் என் அப்பா. தற்பொழுது உயிருடன் இல்லை. வழக்கு குறித்து எனக்கு எதும தெரியாது. காட்டப்படும் 11.02.2020ம் தேதியிட்ட பார்வைமகசரில் உள்ள கையொப்பம் என்னுடையது அல்ல. போலிஸ் என்னை விசாரிக்கவில்லை.

(சாட்சியை பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வேண்டினார். ஆவணங்கள் ஆய்வு செய்யப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது)

<u>குறுக்கு விசாரணை அரசு தரப்பில்</u>

போலிஸ் விசாரணையில் 11.02.2020ம் தேதி நானும் எனது அப்பாவும் வீட்டிலிருந்தபோது தாலுகா போலிஸ் ஆய்வாளர் மதியம் 12.00 மணிக்கு சிவன் கோவில் பின்புறம் சூரக்கோட்டை ராஜாவிற்கு வேண்டப்பட்ட 5 வெளியூர் நபர்கள் கொள்ளையடிக்க உட்கார்ந்திருந்தார்கள் என்றம், அவர்களை ஆய்வாளர் கைது செய்து அழைத்துச் சென்றார் என்றும், ஆய்வாளர் மாலை 4.00 மணிக்கு சிவன் கோவில் பின்புறம் சம்பவ இடத்தை பார்வையிட்டு வரைபடம் வரைந்து பார்வை மகசர் தயார் செய்தார் என்றும், அதில் நானும், என் அப்பாவும் சாட்சி கையொப்பம் போட்டு விட்டு தற்பொழுது உண்மைக்கு புறம்பாக பொய்யாக சாட்சிகயம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை எதிரிகள் தரப்பில்

இல்லை.

நான் சொல்ல என் உத்தரவுபடி தட்டச்சிடப்பட்டு
என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும் சாட்சிக்குப் படித்து
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று ஒப்புக்
கொள்ளப்பட்டது.

ஒம்/-...ஜி.சுந்தரராஜன்,
கூடுதல் மாவட்ட (ம) அமர்வு நீதிபதி,
இன்றியமையாப் பண்டங்கள் சட்ட சிறப்பு நீதிமன்றம்,
தஞ்சாவூர்